

கலட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் திரு. கந்தையா கந்தசாமி

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

31.03.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



கலட்டியைப்

பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும்

கொண்ட

அமரர்

# திரு. கந்தையா கந்தசாமி

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்


31-03-2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அறிவுக்கு தந்தை அன்புக்கு அன்னை

# சமர்ப்பணம்


எம்மை நல்வழி நடாத்தி
எல்லோருக்கும் நல்லவராய்
உயர்வான பண்பாளராய்
இன்முகத்தோடும் புன்சிரிப்போடும்
அன்புடனும் பாசத்துடனும்
பணிவுடனும் வாழ்ந்து
நல்லவராய் வல்லவராய் நாம் வாழ
அறிவுரைகள் கூறி
இன்று தெய்வமாகிவிட்ட
எமது அன்புத் தெய்வத்தின்
பொன்னடிகளில் காணிக்கையாக
இந்நினைவு மலரினைச்
சமர்ப்பிக்கின்றோம்.



குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்ணில்:- 08.05.1929 விண்ணில்:- 01.03.2012

# அமரர் வீ.கே. கந்தசாமி (புதுமைலோலன்)

(ஓய்வுபெற்ற அதிபர், நவாலி அட்டகிரி வித்தியாலயம்)

## தித் வெண்பா

ஆண்டு கர தன்னில்லா மாசியில்
பூண்ட அட்டமி திதியில் ஈண்டுபுகழ்
கந்தசாமி புதுமைலோலன் பிறவிக் கடல் தாண்டிச்
சிவன்திரு வழிசேர்ந்தார் தினம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிறப்பு 01.04.1964

இறப்பு 16.10.1987

# அமரர்

# கந்தசாமி மதியழகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# திருமுறைத் தோத்திரப் பாக்கள்

# பஞ்ச புராணம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்கவல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் - தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

தந்தையார் போயினார் தாயாரும்
போயினார் தாமும் போவார்
கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார்
பார்க்கின்றார் கொண்டு போவார்
எந்தநாள் வாழ்வதற் கேமனம்
வைத்தியா லேழை நெஞ்சே
அந்தணாரூர் தொழு துய்யலா
மையல் கொண்டஞ்ச நெஞ்சே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

தாமே தமக்குச் சுற்றமும்
தாமே தமக்கு விதிவகையும்
யாம்ஆர்? எமதுஆர்? பாசம் ஆர்?
என்ன மாயம்? இவை போக
கோமான் பண்டைத் தொண்டருடும்
அவன்தன் குறிப்பே குறிக்கொண்டு
போம்ஆறு அமையின் - பொய்நீக்கி
புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே.

## திருவிசைப்பா

ஏகநா யகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலமேறி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பர வியோக மாகும் திருச்சிற்றம்பலத்தில் நின்று
பொற்புடன் நடனஞ்செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்றி.

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகி தோன்றிய பொருளுமாகிப்
பேதியா யேகமாகி பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்குந்தில்லை பொதுநடம் போற்றிபோற்றி.

## திருப்புகழ்

அகரமுமாகி அதிபனுமாகி
அதிகமு மாகி **அகமாகி**
அயனென வாகி அரியென வாகி
அரனென வாகி **அவர்மேலாய்**
இகரமுமாகி எவைகளுமாகி
இனிமையுமாகி **வருவோனே**
இரு நிலமீதில் எளியனும் வாழ
எனது முன்னோடி **வரவேணும்**
மகபதியாகி மருவும் வலாரி
மகிழ்களி கூறும் **வடிவோனே**
வனமுறை வேடனருளிய பூஜை
மகிழ் கதிர்காம **முடையோனே**
செககண சேகு தகுதிமி தோதி
திமியென ஆடு **மயில்லோனே**
திருமலிவான பழமுதிர் சோலை
மலைமிசை மேவு **பெருமாளே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவினுரு வாகி வந்து வயதளவிலேவ ளர்ந்து
கலைகள் பல வேதெரிந்து **மதனாலே**
கரியகுழல் மாதர் தங்கள் அடிசுவடு மார்பு தைந்து
கவலை பெரி தாகி நொந்து **மிகவாடி**
அரகரசி வாயவென்று தினமுநினை யாமல்நின்று
அறுசமைய நீதி யொன்றும் **அறியாமல்**
அசனமிடு வார்கள் தங்கள் மனைகள் தலை வாசல்நின்று
அனுதினமு நாணமின்றி **அழிவேனோ**
உரகபட மேல்வ ளர்ந்த பெரியபெரு மாள ரங்கர்
உலகளவு மாலம் கிழ்ந்த **மருகோனே**
உபயகுல தீவ துங்க விருதுகவி ராச சிங்க
உறைபுகலி யூரி லன்று **வருவோனே**
பரவைமனை மீதி லன்று ஒருபொழுது தூது சென்ற
பரமனரு ளால்வ ளர்ந்த **குமரேசா**
பகை யசுரர் சேனை கொன்று அமரர்சிறை மீளவென்று
பழநிமலை மீதில் நின்ற **பெருமாளே.**

## வாழ்த்து

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் அணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீர் அடியார் எல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்



திருவாசகச் சிறப்பு

தொல்லை யிரும் பிறவி சூழுந்தளை நீக்கி
அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னுந் தேன்.

நமச்சி வாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமனிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடியோற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசன் அடிபோற்றி சிவன்சே வடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விரும மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லவுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்றஇத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கம் அளவுஇறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தோனூறு நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெருமானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்மை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# கந்தையா கந்தசாமி

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகக் கொண்ட வர்த்தகர் கந்தையா வண்ணார்பண்ணை கலட்டியைப் பிறப்பிடமாகவும வதிவிடமாகவும் கொண்ட குடக்கர் ஆறுமுகத்தின் இளைய மகள் அன்னம்மாவை திருமணம் செய்து கொண்டார். அவர்களின் மூன்றாவது பிள்ளையாகவும் மூத்த புதல்வனாகவும் வி,கே. கந்தசாமி பிறந்தார். யோகரெத்தினம் - நடராசா, மகேஸ்வரி - சபாரெத்தினம், ஜெயராசசிங்கம், தங்கேஸ்வரி - இரத்தினம், கலாநிதி - குணராசா ஆகியோரை சகோதரர்களாகக் கொண்டவர். இவர்களில் யோகரெத்தினம், மகேஸ்வரி, ஜெயராசசிங்கம் ஆகியோர் அமரர்களாகிவிட்டார்.

தாயும் அக்காமாரும் வைத்த பெயர் கந்தசாமி . ஆனால் தந்தை பிறப்புப் பத்திரத்தில் பதிந்த பெயர் குணசிங்கம். இவர் 04-05-1929இல் பிறந்தார். ஆனால் தந்தையார் 08-05-1929 எனப் பதிந்தார். பின்னர் இவர் தனது பெயரை கந்தசாமி என மாற்றிக் கொண்டார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை வண்ணை நாவலர் வித்தியாசாலையில் கற்று தொடர்ந்து அங்கேயே S.S.C வரை கற்றுத் தேறினார். பின்னர் பலாலி அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியப் பயிற்சி பெற்று பத்தொன்பது வயதில் வெளிவந்தார். அதன் பின் ஹிங்கிராங்கொடை தமிழ் கலவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையில் ஆசிரியராக முதல் நியமனம் பெற்று கடமை யாற்றினார். பின்னர் வெலிகந்தை அரசினர் பாடசாலையில் கடமையாற்றிய பின் யாழ்ப்பாணத்திற்கு மாற்றலாகி வந்தார். யாழ். மஸ்ர உத்தீ பாடசாலை, கொட்டடி நமசிவாயம் வித்தி யாலயம், கொக்குவில் ஞானபண்டித வித்தியாலயம், றம்பொட மகாவித்தியாலயம்ஆகிய பாடசாலையில் ஆசியராகக் கடமை யாற்றினார். பின் வவுனியா கோவில் புதுக்குளம் பாடசாலையில் அதிபராக உயர்வு பெற்றார். அதனைத் தொடர்ந்து புத்தூர் சோமஸ்கந்தா, வைத்தீஸ்வரா வித்தியாலயம், அராலி வள்ளியம்மை வித்தியாலயம், சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம், ஆனைக்கோட்டை உயரப்புலம் மெதடிஸ்த பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றினார். நவாலி அட்டகிரி சைவ வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றி 08-05-1984 இல் தனது 55ஆவது வயதில் ஓய்வு பெற்றார்.

இவரின் பேரன் குடக்கர் ஆறுமுகம் சித்தராக வாழ்ந்தவர். சுப்பிரமணிய பாரதியார் இவரை தனது ஞான குருவாக ஏற்று சிலகாலம் இவருடன் தங்கியிருந்தவர். இவர் தமிழ் நாட்டிலுள்ள ஸ்ரீவில்லி புத்தூர் என்ற இடத்தில் சமாதி நிலையை அடைந்தார். இவரது சமாதிக் கோயில் இன்றும் அங்குள்ளது.

''புதுமைலோலன்'' என்ற புனைபெயரைச் சூட்டிக் கொண்ட இவர் ஒரு சிறந்த எழுத்தளாரும் பேச்சாளரும் ஆவார். இவரது தம்பி கலாநிதி குணராசா ''செங்கையாழியான்'' இவரால் உருவாக்கப்பட்ட நாடறிந்த பிரபல எழுத்தாளராவார்.

இவர் ஏழாலை மேற்கைச் சேர்ந்த நாகநாதர் பாறுப்பிள்ளை தம்பதியரின் ஒரே மகளான ஆசிரியை கனகமணியை 1959ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். சீவரத்தினம், சிவலிங்கம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானம், சிவானந்தம் ஆகியோர் இவரது சகோதரர்களாவார். சீவரத்தினம், சிவலிங்கம் ஆகியோர் அமரர்களாகிவிட்டனர். திருமதி கனகமணி பல பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமையாற்றி ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையில்உப அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றார். இவரது இல்லற வாழ்வில் ஆறு குழந்தைகளைப் பெற்றெடுத்தார். அன்பரசி, அன்பழகன், கலையரசி, எழிலரசி, மதியழகன், இளவழகன் ஆகியோரில் மதியழகன் அமரராகிவிட்டார். அன்பரசி - ஸ்ரீசந்திரமோகனையும், அன்பழகன் - சுகன்யாவையும், கலையரசி - ஈஸ்வரனையும், எழிலரசி - ஜெயக்குமாரையும், இளவழகன் - மஞ்சுளாவையும் திருமணம் செய்து கொண்டனர்.

பேரக்குழந்தைகளாக முறையே சுகந்த், பிரசாந்த், லாவண்யா, லவன், கஜன், ஜெகன், சோபிகா, கீர்த்திகா, ஜெசிக்கா, ஜோன் ஆகியோரையும் கொஞ்சி மகிழ்ந்தார். பேரன் சுகந்த் - நிலுஷாவைத் திருமணம் செய்து கொண்டார்.

புதுமைலோலன் சிறந்த ஒரு எழுத்தாளராகவும் மிக உன்னதமான பேச்சாளராகவும் விளங்கினார். தமிழரசுக் கட்சியின் முக்கிய பேச்சாளர்களில் ஒருவராவார். இக்கட்சியின் சகல போராட்டங்களிலும் பங்குபற்றி கட்சிக்காக உழைத்தவர். கச்சேரியில் சத்தியாக்கிரகம் செய்து பனாங்கொடை சிறையில் அ. அமிர்தலிங்கம் போன்ற பல தலைவர்களுடன் அடைக்கப் பட்டார். அங்கிருந்து அன்புமகள் அன்பரசிக்கு எழுதிய மடல் என்ற நூலை எழுதினார்.

அன்பு வெளியீடு. அன்பு புத்தகசாலை, அன்பு பாலர் பாடசாலைகள் என்பனவற்றை நடத்தினார். இவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் குடும்ப ஒளிவிளக்கு அணைந்ததோ!

53 ஆண்டுகள் இணைபிரியாது வாழ்ந்தோம். இப்போது சோடிழந்த பறவையாய் தனிமையில் தவிக்க விட்டு எங்கு சென்றீர்கள் ஐயா. உங்களுக்கு நான் துணையாய் இருந்து கடமைகளைச் செய்தேன். எந்நேரமும் மணி! மணி! என அழைத்த வண்ணம் இருப்பீர்கள் இறுதி நேரத்தில் எதுவும் கூறாது நான் கதறி அழுவேன். அதைச் சகிக்க முடியாது என்று தானா அருகில் வருமுன் ஓடி மறைந்தீர்கள் ஐயா. நீங்கள் சென்ற வழியைக் காட்டுங்கள் நானும் பின் தொடர்ந்து இணைவோம்.

உங்களைப் போல் அன்பு நிறை வெள்ளை உள்ளம் கொண்டவர்களைக் காண்பதரிது. தன் பிள்ளையைப் போல பிறருக்கும் கல்வியறிவூட்டி வாழ வழி காட்டினீர்கள். அன்பு, பண்பு, இரக்கம், ஆற்றல், துணிவு, அறிவு, தமிழ்ப்பற்று நிறைந்தவர் என்பதை வாழ்வில் காட்டியுள்ளீர்களஈ. 1962ல் கச்சேரியடியில் சத்தியாக்கிரகமிருந்து பின் தலைவர்களுடன் தடுப்புக் காவலில் இருந்ததை நினைத்துப் பார்க்கிறேன். மொழிப்பற்று காரணமாகச் சிறையிலும் இருந்தீர்கள் கடந்த கால நிகழ்வுகள் யாவும் மனத்திரையில் ஓடிக் கொண்டிருக்கிறது.

நான் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காகச் சென்றபோது என்னைக் காணாது கலங்கி மணி! மணி! எனக் கதறியதாகக் கூறினார்கள் எப்படி இப்பொழுது தனிமையில் செல்லத் துணிந்தீர்கள் ஐயா. சூழ்நிலை காரணமாக பிள்ளைகள் வெளிநாடு சென்றனர்.எம்மைப் பார்ப்பதற்கு வந்தபோது பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் கதைத்துச் சிரித்து மகிழ்ந்தீர்கள். யாவரையும் கலங்க வைத்து பிரிந்து விட்டீர்களே!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

**உங்கள் பிரிவால் துயருறும் அன்பு மனைவி**

**க. கனகமணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவுகள்

அப்பா! ஆசையுள்ள அப்பாவே
மூத்த மகள் நானென்று முழு அன்பைச் சொரிந்தீர்கள்
எந்த நிறுவனம் தொடங்குவது என்றாலும் ஸ
என்பெயரை வைத்து மகிழ்ந்தீர்கள்
''அன்பு வெளியீடு'' ''அன்புப் பாலர் பாடசாலை''
''அன்பு புத்தகசாலை'' நாம் இருந்த வீட்டிற்கு
''அன்பகம்'' என வைத்தீர்கள்
நீங்கள் காட்டிய இலட்சியப் பாதையில்
வெற்றிநடை போடுவேன்.
அம்மாவின் கண்ணீர் துடைப்பேன்
கடந்த இருவருடங்களாக நான் இலங்கை
வந்தபோது உங்களுடன்
கதைத்து, மகிழ்ந்த நாட்களை எண்ணி
ஆறுதல் அடைகிறேன்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்!

**அன்பு மகள்**
**அன்பரசி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலங்க விட்டு சென்று விட்டீர்களே . . . என் அப்பா

அப்பா.......

நான் உங்களிடம் படித்தது பல...

அதில் எனக்குப் பிடித்தது போராடு என்பது தான்.....

நீங்கள் வாழ்க்கையில் பட்ட கஷ்டங்களைப் பார்த்திருக்கிறேன்

ஒவ்வொரு கட்டத்திலும் போராடி வெற்றி பெற்றீர்கள்

இதுவே எனது வாழ்க்கையில் எப்படி வாழ வேண்டும்

எப்படி வெற்றிப் படிகளை அடைய வேண்டும் எனக் கற்றுத்தந்தது.....

அப்பா........

உங்களின் வாழ்க்கையின் அழியாச் செல்வம் அம்மா மட்டும்தான்......

அம்மாவின் பொறுமையும் சகிப்புத் தன்மையுமே......

உங்கள் வாழ்வின் நிரந்தரத் துணை......

அப்பா.........

எதற்குமே கலங்காத நீங்கள் கலங்கியது.......

என்னை விமான நிலையத்தில் வழியனுப்பும் போது.....

உங்கள் கலங்கிய கண்கள் உங்களின் பாசத்தைக் காட்டியது.

அப்பா.......

நீங்கள் உயிருடன் இருக்கும் போது ஒரு மகனாக
செய்த கடமைகளை விட....

நீங்கள் இறந்த பின் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய
முடியாமல் போனது...........

எனது துரதிர்ஷ்டமே.......

அப்பா..........

ஒரு மனிதன் விழாமல் வாழ்ந்தான் என்பது பெருமையல்ல.

விழுந்த போதெல்லாம் எழுந்தான் என்பதே பெருமை.....

**உங்கள் அன்பு மகன்**

**அன்பழகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அப்பா என்றும் எங்களுடன்

சாவும் வாழ்வின் ஒரு அத்தியாயம்
தத்துவம் ஒன்றே - எனினும்
எமக்கு வரும்போது கலங்குகிறோம் அப்பா
எம்குடும்ப அச்சாணியாய்
எம் வாழ்வுப் பயண திசை காட்டியாய் விளங்கியவரே
எம் மிளிர்வை நேரில் காணாது எங்கு சென்றீர்கள் அப்பா
உங்கள் பெயரை வைத்தே எம்மை நாமே
அடையாளப்படுத்திக் கொண்டோம்
உங்கள் பிள்ளைகளானதால் உவகை கொண்டோம் அப்பா
அரசியலிலும் வாழவினிலும் கொண்ட கொள்கையோடு
இறுதிவரை வாழ்ந்து காட்டி
வாழ்வியலின் இலக்கணமானீர்கள் அப்பா
எனினும் ''புதுமை''யாய் விளங்கி
எம் வாழ்வினில் எம்மை உருவாக்கிவிடவே
நீங்கள் சுமந்த வலிகளை நாம் அறிவோம் அப்பா
பேச்சுப் போட்டியானாலும், கட்டுரை, விவாதமானாலும்
எமக்கு உறுதுணையாய் வழிகாட்டி
எம்மையும் அடையாளப்படுத்தனீர்கள் அப்பா
சாவு உங்களை எம்மிடமிருந்து
பிரித்துவிட முடியாது - உங்கள்
நினைவுகள் என்றும் எங்களுடன் தொடர்ந்திடுமே.

**உங்கள் ஆத்மா சாந்தி அடைவதாக!**

**இளங்கோ – இளவழகன்**
ஐக்கிய இராச்சியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I did not get to spend a lot time with Ammapah, but I am glad that I came to visit him last year. I have heard about his stories and active life. He was trvly a great man. Although last year he was mainly in in his bed, his will power and strength could still be seen. He eyes shone of an innecense and goodness,

He will be missed.

***Suganth Srichandramohan (Grandson)***
Toronto, Canada.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Granddad

Our Garndfather was a man who had smiles to btrighten our days.
We shill remember the way he called
appamma "mani (மணி) bring for me water"
We did dee how appappa were very happy to see us.
Grandad, you were just a lad
So many years ago
You had your loves and had your dreams
you watched us come and go
We haven't always thought about
the things that you have seen
To us you've just been 'Granddad'
No thought of who you;ve been
But we remember now in love
your life from start to end
and we're just glad we knew you
As Granddad, and as friend.

Your special Grand children
***Lavan, Gajan and Jayan***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sobika's memory of Ammappa

My grandfather was a great man. From the stories my mother has shared with me. I have grown to appreciate all his contributions throughout his lifetime. Unfortunately I only had the opportunity to visit him once when I was ten. My fondest memory from that visit was performing a bhatatha natyam piece for him which I think he enjoyed. I was also amused with the way he would call out my grandmother's name, even now it makes me smile. My grandfather led a life as an activist, with a dtrong interest in literature and smile. My grandfather led a life as an activist, with astrong interest in literature and was always a loving father and grandfather. May your soul rest in peace Ammappa.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Kirthika's memory of Ammappa

My grandfather was a good man. My mother told me many memoriesshe had with him, and how he was a successful author. I saw him once when I was 4, and again when I was 13 my favourite memory with him was during the second visit to Sri Lanka, when I first saw him, he was telling my mother and I a memory he has of me being cheerful and happy from the last visit. I wish I had the chance to get to know him better. Ammappa will be missed rest in peace.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Laavanya Srichandramohan

My Grandfather lived a remarkable life. He was known for being a very well known writer, speaker and entrepreneur. With the small time I was able to spend with my grandfather. I learned a lot about him and we shared gate ........... together as well. Some of my fondest memories that we shared include sitting down nest to him and sharing biscuits while having nice casual conversations. He would always ask about me and my life and how I was doing, which showed that he was a caring man, and also a good listener. I will never forget the time I got to spend with him, and he will greatly be missed I feel fortunate for having him as a part of my life and for calling him my grandfather.

From a loving granddaughter,
***Laavanya Srichandramohan.***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் இருக்கும் உங்கள் தங்கையின் கண்ணீர் அஞ்சலி

கண்ணீரில் ஒரு மாதம் ஓடி விட்டதே அண்ணா
ஓடி விட்டதே மாதமொன்று ஆனது அண்ணா
உங்கள் பிரிவு
பசுமை நிறைந்த நிஜ நினைவுடனே
கூடி இருந்த எம் கூட்டிலே
பாசப் பறவை ஒன்று
காற்றோடு கலந்ததை எப்படித் தாங்குவது - அண்ணா
சிறுவர் முதல் பெரியோர் வரை
அனைவரது அன்பிற்கும் உரித்தான அண்ணாவே
நல்லதோர் மேடைப் பேச்சாளனாக இருந்தீர்களே
அன்பு, கல்வி என்ற தேனமுதத்தை எனக்கு
- ஊட்டிவிட்ட அண்ணாவே
கதறுகிறோம் காலமெல்லாம் கதறுகிறோம்
இடம்பெயர்ந்து சாவகச்சேரிக்கு,
ஒன்றாய் நடந்து போனோம் அண்ணா,
ஒரேவீட்டில் சின்னக்கா, நாங்கள், நீங்கள்
எல்லோரும் சின்னக்கா சம்மந்தி வீட்டில் இருந்தோம்
நாங்கள் கொழும்பு வரும்பொழுது
சாப்பாடு தந்து வாசலில் வந்து
வழி அனுப்பி வைத்தீர்கள் அண்ணா
உங்களைக் கண்டு பதினான்கு வருடமாகிறது அண்ணா
தங்கச்சி, தங்கச்சி என்று வாய் நிறையக்
கூப்பிடுவீர்களே என்னை இனியார் கூப்பிடுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலன் வந்த போதும், ஆம் என்று
தலை குனிந்து அமைதியாகப் போனீர்களே
ஊர் உலகம் போற்ற வாழ்ந்து,
சிரிப்புடனே அனைவரையும் கவர்ந்தீர்களே,
நடுவே எங்களை விட்டுப் பிரிந்தாலும்
எம் இதயத்தில் நான் சாகும் மட்டும்
உங்களை மறவேன் அண்ணா,
சோடி இழந்த கன்றினைப்போல்
உங்கள் துணையாள் என் அண்ணி
கதிகலங்கி பரிதவிக்கும் உங்கள் பிள்ளைச்
- செல்வங்கள்
பாசத்தின் பிறப்பிடமே, அன்பான அண்ணாவே
எத்தனை வருடம் சென்றாலும்
உங்கள் வஞ்சமில்லா
நெஞ்சத்தை நினைந்து நெகிழ்ந்து உருகி
தவிக்கும் உங்கள் உடன் பிறப்புக்கள்
மறுபிறப்பினில் நான் உங்கட்கு
தங்கையாகப் பிறப்பேன் அண்ணா
அன்பின் சீரணி பாபா
எனக்கு இப்படி ஒரு அண்ணா தந்ததற்கு
நன்றி கூறுகிறேன்.

உங்கள் பிரிவால் வாடும் தங்கை,மைத்துனர்
(எனது பிள்ளைகள்)

சாயிராம் **தங்கை இ. தங்கேஸ்வரி**
சாயிராம் **மைத்துனர் அ. இரத்தினம்.**
சாயிராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் அண்ணா

ஈழத்தின் எழுத்தாளரும் பேச்சாளருமான புதுமைலோலன் என்ற அண்ணனை எனது மூத்த அண்ணராகப் பெற்றது பெரும் பாக்கியமாகும். சிறுவயதில் நான் பத்திரிகைகள், சஞ்சிகைகளைப் படிப்பதற்கு வழிகாட்டியாக இருந்தவர்கள் என் தந்தையும், அண்ணருமாவர். நான் ஒரு எழுத்தாளனாக வரவேண்டுமென அவா கொள்ள வைத்தது அவர் எழுத்தாளராக உருவாகியமை யாகும்.

பாடநூல்களை நான் மிக இளவயதில் எழுதத் தொடங்கிவிட்டதற்கு ஒரு உந்து கருவி என் அண்ணர். முதற் காலகட்டத்தில் எனது நூல்களை அச்சிட்டு வெளியிட்ட பெருமை எனது அண்ணரைச் சாரும். அவர் ஒரு சிறந்த ஆசிரியர் ஆரம்பத்தில் கம்யூனிச கோட்பாடுகளைப் பின்பற்றி மு.கார்த்திகேசனை பின்பற்றினார். பின்னர் தமிழரின் தந்தை செல்வநாயகத்தின் கொள்கைகளை பின்பற்றி பேச்சாளனாக தமிழரசுக் கட்சியை வளர்த்தவர்களில் இவரும் ஒருவர். இக்கட்சியின் சட்டமறுப்பு இயக்கங்களிலும் கலந்து கொண்டார். இவரது இழப்பு குடும்பத்திற்கு பேரிழப்பாகும்.

சாகித்ய ரத்னா

**கலாநிதி க. குணராசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# -அப்பா! என் அன்பு அப்பா!-

அன்பு உள்ளம் கொண்ட என் அன்பு அப்பா!
அறிவு பிச்சை கொடுத்த என் அப்பா!

ஆசையாக எதைக் கோட்டாலும் அள்ளிக் கொடுத்த என் அப்பா!
ஆணித்தரமான கொள்கை பரப்பாளர் என் அப்பா!

இரக்கமான உள்ளம் கொண்ட என் அப்பா!
இதமாக பேசி மகிழ்வித்த இனியவர் என் அப்பா!

ஈழத்தின் விடிவுக்காக ஆரம்பத்தில் போரிட்ட என் அப்பா!
ஈழத்தின் பெருமை மிக்க பேச்சாளர் என் அப்பா!

உயரிய சிந்தனைகள் கொண்ட என் அப்பா!
உதவி செய்வதில் உன்னதமானவர் என் அப்பா!

ஊரெல்லாம் அறிவை வளர்த்த ஆசான் என் அப்பா!
ஊரில் பழம் பெரும் எழுத்தாளர் என் அப்பா!

எளிமையாக வாழ கற்று கொடுத்த என் அப்பா!
எதிர் நீச்சல் போடும் துணிவைக் கொடுத்தவர் என் அப்பா!

ஏழைகளுக்கு கைகொடுக்கும என் அப்பா!
ஏழ்மையை எதிர்த்து வாழ கற்று கொடுத்த என் அப்பா!

ஐயம் இன்றி வீரத்தை ஊட்டிய என் அப்பா!
ஐதார்த்த வாழ்க்கையை உணர்த்தியவர் என் அப்பா!

ஓயாது உழைத்து ஓய்வு பெற்ற அதிபர் என் அப்பா!
ஒவ்வொரு தோல்வியிலும் அறிவுரைகள் கூறும் என் அப்பா!

ஓடி விளையாடும் பாலர்களுக்கு ஆரம்பக் கல்வி ஊட்டிய என் அப்பா
ஓடம்போல் புத்திமதிகள் சொன்ன புதுமைலோலன் தான் என் அப்பா!!!

ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்

**அன்பான மகள் எழிலரசி**

சுவிற்சலாந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Ammahpa


Ammahpa. It was a true pleasure to have finally met you. After hearing about you throughout my life I feel honoured that we finally met during my visit to Jaffna. Interacting with you was always special and I enjoyed observing your unique character and strong will you continuously displayed. I most dmired the love you had for Ammahma which was evident in all you did. The bond you two shared was very special and being privy to witness that was a joy in itself. You will be greatly missed and I am proud to the your grandson.

Thank you for sharing stories with me for taking an interest in getting to know me and for teaching me that life is kind and it is what we make it.

With etemal love from your grandson
***Prashanth***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நவில்கின்றோம் நன்றி

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"**


எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்
பிரகாசித்து அணைந்த

## *திரு. கந்தையா கந்தசாமி*

அவர்கள் எமைவிட்டு சிவபதப்பேறு எய்திய செய்தி கேட்டு
ஓடோடி வந்து எம்துயரில் பங்கெடுத்து உதவிகள்
புரிந்தவர்களுக்கும்
தொலைபேசி தந்தி மூலம் இரங்கல் தெரிவித்தோருக்கும்
உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அன்னாரின்
இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களிற்கும்
மலர்வளையம் சாத்தியவர்களிற்கும், துண்டுப் பிரசுரம்
வெளியிட்டவர்களிற்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்து
கொண்டவர்களுக்கும், எமது இல்லத்தில் நடைபெற்ற
அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய
போசனத்திலும் கலந்து கொண்டவர்களுக்கும்,
அத்துடன் இம்மலரினை அச்சிட்ட
சிவதயா அச்சகத்தாருக்கும்
இதயபூர்வமான நன்றியைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.



**குடும்பத்தினர்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா

ஐயம்பிள்ளை → கதிரவேலு → அறுமுகம் → நாக

அன்னம்மா + கந்தையா

* யோகரத்தினம் + * நடராசா
* மகேஸ்வரி + * சபாரட்ணம்
**கந்தசாமி**
தங்கேஸ்வரி + இரத்தினம்
* ஜெய + சிவ

அன்பரசி + ஸ்ரீசந்திரமோகன்
→ சுகந்த் + நிலூஷா
பிரசாந்த்
லாவண்யா

அன்பழகன் + சுகனி
→ லவன்
கஜன்
ஜெயன்

கலையரச + ஈஸ்வரன்
→ சோபிக்க
கீர்த்திகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவழி

→ நாகமுத்து

**நாகநாதர் + பார்வதிப்பிள்ளை**

→ * சீவரட்ணம; + ஞானம்மா

→ **கனகமணி**

→ * சிவலிங்கம் + * சரஸ்வதி

→ சிவஞானம் + * பவளக்கொடி

→ சிவானந்தன் + சாந்தகுமாரி

யா

* ஜெயராசசிங்கம் + சிவனேஸ்வரி

குணராசா + கமலாம்பிகை

லையரசி + சஸ்வரன் → சோபிக்கா, கீர்த்திகா

எழிலரசி + ஜெயக்குமார் → ஜெசிக்கா, ஜோண்

* மதியழகன்

இளவழகன் + மஞ்சுளா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாக நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

–பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்–



சிவதயா பிறிண்டேர்ஸ், நாச்சிமார் கோயிலடி, யாழ்.
தொ.இல: 0773717353

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org